# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 26.08.2025**

**அசல் வழக்கு எண். 237/2019**

**வா.சா.1 ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில்  பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இவ்வழக்கு சர்வே எண்.49ல் உள்ள இடம் பொறுத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.49ல் உள்ள இடத்தன் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 15 சென்ட் இருக்குமா என்றால் சுமார் 1.5 ஏக்கருக்கு மேல் இருக்கும்.  சர்வே எண்.49ல் உள்ள இடத்தில் 3 ல் 2 பங்கு எனது தந்தை வேல்ச்சாமிதேவருக்கு பாத்தியப்பட்டது என்றாலும், 3ல் 1 பங்கு வேலுத்தேவருக்கு பாத்தியப்பட்டது என்றாலும் சரிதான். சர்வே எண்.49ல் இடத்தில் 2/3 பங்கு எனது தந்தை வேல்ச்சாமி தேவருக்கு பாகப்பிரிவினை மூலம் கிடைக்கப்பட்டது  என்றால் சரிதான்.

2. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்குரை தபசில் சொத்தை தவிர்த்து வேறு சொத்துக்களும் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வழக்குரை தபசில் சொத்தை தவிர்த்த வேறு சொத்துக்கள் பொறுத்து என் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்கூறிய வேறு சொத்துக்கள் யார் அனுபவத்தில் உள்ளது என்றால் என்னுடைய அனுபவத்தில் உள்ளது.  எனது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட மேற்கூறிய வேறு சொத்துக்களில் வேறு யாருக்கும் பாத்தியதை உண்டா என்றால் இல்லை.

3. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் எனது தந்தை வேல்சாமிதேவர் பிராது தபசில் சொத்தை பொறுத்தும்  மற்றும் வேலுத்தேவர் சர்வே எண்.49ல் உள்ள 1/3 பங்கு பொறுத்தும் கடந்த 16.10.1995ம் தேதிய பதிவு கிரைய ஆவணம் மூலம் பிரதிவாதியின் தாயரான மாடத்தியம்மாளுக்கு கிரையம் கொடுத்துவிட்டதாக கூறப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு எதிர்வழக்குரையில்

கூறப்பட்டுள்ளது. மேற்படி 16.10.1995 தேதியிட்ட பதிவு கிரைய ஆவணத்தின் நகலை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பிரதிவாதியின் தாயார் மாடத்தியம்மாள் சர்வே எண்.49 ல் உள்ள இடத்தை பொறுத்து 31.10.2011 தேதியிட்ட பதிவு குடும்ப ஏற்பாடு ஆவணத்தை பிரதிவாதிக்கு பிறப்பித்துக் கொடுத்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எதிர்வழக்குரையில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அந்த ஆவணம் பிறப்பிக்கப்பட்டது பற்றி எனக்கு தெரியாது. 31.10.2011 தேதியிட்ட பதிவு குடும்ப ஏற்பாடு ஆவணத்தில் நகலை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சர்வே எண்.49 ல் உள்ள மொத்த இடத்தை பொறுத்தும் வேறு சொத்துக்களை பொறுத்தும் கேரள மாநிலத்தில் வசிக்கும் அப்துல் சலாம் என்பவருக்கு 22.02.2019 தேதியிட்ட பதிவு கிரைய ஆவணம் பிரதிவாதி ஏற்படுத்திக் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் பற்றி எனக்கு தெரியாது. 22.02.2019 தேதியிட்ட பதிவு கிரைய ஆவணத்தின் நகலை பெற்று நான் பார்த்துள்ளோனா என்றால் இல்லை. பிரதிவாதி தனது எதிர்வழக்குரையின் நகலை எனது வழக்கறிஞரிடம் கொடுத்து விட்டு 26.02.2020 அன்று எதிர்வழக்குரையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துவிட்டார் என்றால் சரிதான். இவ்வழக்கில் மேற்கூறிய 16.10.1995 தேதியிட்ட பதிவு கிரைய ஆவணம், 31.10.2011 தேதியிட்ட பதிவு குடும்ப ஏற்பாடு ஆவணம் மற்றும் 22.02.2019 தேதியிட்ட பதிவு கிரைய ஆவணம் ஆகியவற்றை ரத்து செய்யக்கோரி பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் பரிகாரம் கோரவில்லை. சர்வே எண்.49 ல் உள்ள இடம் பொறுத்து பிறப்பிக்கப்பட்ட பட்டா எண்.363 கொண்ட பட்டா வேல்சாமிதேவர் மற்றும் வேலுத்தேவர் ஆகியோர்கள் பெயரிலிருந்து பிரதிவாதியின் தாயாரான மாடத்தியம்மாள் பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் தாயார் மாடத்தியம்மாள் பிரவிாதியின்

பெயருக்கு சர்வே எண்.49ல் உள்ள இடம் பொறுத்து ஏற்பாடு ஆவணம் பிறப்பித்துக் கொடுத்த பிறகு பிரதிவாதியின் பெயரில் சர்வே எண்.49ல் உள்ள இடம் பொறுத்து பட்டா எண்.2913 என்ற எண் கொண்ட பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.49ல் உள்ள இடம் பொறுத்து தற்போது அப்துல் சலாம் என்பவர் பெயரில் பட்டா உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிராதுதபசில் சொத்து பொறுத்து என்பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை. பிராது தபசில் சொத்து எனது அனுபவத்தில் உள்ளதை காண்பிக்கும் வருவாய் துறை ஆவணம் எதுவும், நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு 2 ஆண்டுகளுக்கு முன்பு எனது தந்தை காணாமல் போனதாக ஒரு புகார் மனு கொடுத்து அதன் பேரில் வா.சா.ஆ.2 ஆவணமான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் விசாரணை செய்யப்பட்டு இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டதா என்றால் இல்லை. விசாரணை நிலுவையில் உள்ளது. எனது தந்தை 7 ஆண்டுகளுக்கு மேலாக காணாமல் போய்விட்டார் என்று கூறி அவர் Civil Death அடைந்துவிட்டதாக விளம்புகை கோரி வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தந்தை மனநிலை பாதிக்கப்பட்டிருந்தார் என்பதை காண்பிக்கும் ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோன என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்படுத்தப்படுவதற்கு முன்பு எனது தந்தை அவருக்கு பாத்தியப்பட்ட வேறு சொத்துக்களை கிரையம் கொடுத்தாரா என்றால் கிரையம் கொடுக்கவில்லை. எனது தந்தை மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று இவ்வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும், அதனால் அவர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்பதை காண்பிக்கும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எனது தந்தை இவ்வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு 2 ஆண்டுகளுக்கு முன்பு காணமாமல் போய்விட்டதாக கூறுவது பொய் என்றாலும், அவர் சென்னையில்

எனக்கு வேண்டிய நபரின் வீட்டில் வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறார் என்றாலும் சரியல்ல. எனது தந்தை அவரது பங்கை பொறுத்து பிரதிவாதியின் தாயாருக்கு 16.10.1995 தேதியிட்ட பதிவு கிரைய ஆவணம் பிறப்பித்துக் கொடுத்தது பற்றி எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் தாயார் பிரதிவாதிக்கு சர்வே எண்.49 ல் உள்ள இடம் பொறுத்து பிறப்பித்துக் கொடுத்த 31.10.2011 தேதியிட்ட ஏற்பாடு ஆவணம் பற்றிய விபரம் அந்த ஏற்பாடு ஆவணம் பிறப்பிக்கப்பட்ட தேதியிலேயே எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. பிரதிவாதி அப்துல் சலாம் என்பவருக்கு 22.02.2019 தேதிய பதிவு கிரைய ஆவணம் பிறப்பித்துக் கொடுத்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. 16.10.1995 தேதியிட்ட பதிவு கிரைய ஆவணம், 31.10.2011 தேதியிட்ட ஏற்பாடு ஆவணம் மற்றும் 22.02.2019 தேதியிட்ட பதிவு கிரைய ஆவணம் ஆகிய ஆவணங்களின் மூலம் பிராது தபசில் சொத்தில் ஏற்படுத்தப்பட்ட உரிமை மாற்றங்களை ஆட்சேபணை செய்வதற்கு காலவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் எனது தந்தை வேல்சாமித்தேவர், பிரதிவாதியின் தாயார் மாடத்தியம்மாள் மற்றும் அப்துல் சலாம் ஆகியோர்கள் அவசியத்தரப்பினர் என்றாலும், மேற்படி அவசியதர்பபினர்களை கட்சி சேர்க்காமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், சர்வே எண்.49 ல் உள்ள இடம் பொறுத்து மாடத்தியம்மாள், இவ்வழக்கின் பிரதிவாதி மற்றும் அப்துல் சலாம் ஆகியோர்கள் பெயரில் ஏற்பட்ட பட்டா எண்கள் குறிப்பிட்ட பட்டாவின் விபரங்களை கூறியுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்த பிறகு பிராது தபசில் சொத்து பொறுத்து எனது பெயரில் பட்டா மாற்றம் செய்ய நடவடிக்கை எதுவும் மேற்கொண்டேனா என்றால் இல்லை. பிராது தபசில் சொத்து மற்றும் வேறு குடும்ப சொத்துக்களை பொறுத்து எனது தந்தை மற்றும் நான் 30 ஆண்டுகளுக்கு முன்பு வாய்மொழி பாகப்பிரிவினை செய்து கொண்டோம்

என்றாலும், அந்த பாக பிரிவினையில் பிராது தபசில் சொத்து எனது தந்தைக்கு ஒதுக்கப்பட்டது என்றாலும், அதனால் தான் பிராது தபசில் சொத்தில் எனக்குள்ள உரிமையை காண்பிக்கும் வருவாய் துறை ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. பிராது தபசில் சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும், அதனால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல. பிராதுதபசில் சொத்து தற்போது அப்துல்சலாம் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றாலும், பிராது தபசில் சொத்தில் தற்போது எந்த உரிமையும் இல்லாத பிரதிவாதிக்கு எதிராக மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல.